10/=

பக்கங்கள் 06

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 138 சனிக்கிழமை ஒக்ரோபர் 07 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48



## ஜனாதிபதி மைத்திரி திருப்பதிக்கு விஜயம்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இன்று திருப்பதிக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார். இதனை முன்னிட்டுத் திருப்பதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

திருப்பதி ஏழுமலையான் ஆலயத்தில் தரிசனம் செய்வதற்காக இன்று மாலை திருப்பதிக்குப் புறப்பட்டுச் சென்ற மைத்திரி பால சிறிசேன, பத்மாவதி விருந்தினர் மாளிகையில் இன்று இரவு தங்கி ஓய்வெடுப்பார்.

நாளை அதிகாலை சிறப்புத் தரிசன சேவையில் கலந்து கொண்டு தரிசனம் செய்வார். இதைத் தொடர்ந்து ரங்கநாயகர் மண்டபத்தில், ஏழுமலையானின் பிரசாதம், 2018ஆம் ஆண்டின் நாள்காட்டி மற்றும் கையேடு, ஏழு மலையானின் திருஉருவப்படத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு தேவஸ்தான அதிகாரிகள் வழங்குவர். (எ)

# சிறுவர் இல்லத்தில் சித்திரவதை



### ஐந்து சிறுவர்கள் வைத்தியசாலையில்

கிளிநொச்சியில் இயங்கி வருகின்ற மகாதேவ சைவ சிறார் இல்லத்தில் சித்திரவதைக்குள்ளான ஐந்து சிறுவர்கள் சிறுவர் நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகளால் மீட்கப்பட்டுக் கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குறித்த ஐந்து சிறுவர்களும் மின்சார வயர் மற்றும் ஹொக்கி பட் போன்றவற்றால் தாக்கப்பட்டுள்ளனர் எனவும் உடலின் பல பகுதிகளிலும் உட்காயங்கள் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே சட்ட மருத்துவ அதிகாரியின் பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். நேற்றுக் குறித்த சிறுவர் இல்லத்தில் இருந்த யாழ்ப்பாணத்தை சிறுவன் ஒருவன் தனது

06




## எண்ணெய்க் குதங்கள் குறித்து இந்தியா-இலங்கை பேச்சு

திருகோணமலை எண்ணெய்க் குதங்களைக் கூட்டு முயற்சியாக அபிவிருத்தி செய்வது தொடர்பாக இந்திய, இலங்கைக் கூட்டுப் பணிக் குழுப் பேச்சுக்களை நடத்தி வருகிறது. வீதிகள் அபிவிருத்தி, பெற்றோலியத் துறை மற்றும் திருகோணமலை துறைமுகம் , மின் திட்டங்கள் தொடர்பாகக் கூட்டுப் பணிக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை எண்ணெய்க் குதங்களின் அபிவிருத்தி தொடர்பாகக் கூட்டுப் பணிக்குழுவின் ஊடாக, இரண்டு நாட்டு அரசாங்கங்களும் பேச்சுக்களை நடத்தி வருவதாக, இந்தியன் ஓயில் நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் சியாம் போரா தெரிவித்துள்ளார்.

எனினும் இதுதொடர்பாக இறுதி முடிவு இன்னமும் எடுக்கப்படவில்லை என்றும் அவர் கூறினார். முன்னதாக இதுதொடர்பான புரிந்துணர்வு உடன்பாடு ஒன்று கையெழுத்திடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

# ஒற்றை ஆட்சிக்கே இந்தியா ஆதரவு!



### இந்திய சபாநாயகர் தெரிவிப்பு

ஒன்றுபட்ட இலங்கையின் இறையாண்மையின் பக்கமே இந்தியா எப்போதும் நிற்கும் என்று இந்திய நாடாளுமன்ற சபாநாயகர் சுமித்ரா மகாஜன் தெரிவித்துள்ளார்.

சார்க் நாடுகளின் சபாநாயகர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் 8 ஆவது கருத்தரங்கின் முடிவில், சுமித்ரா மகாஜன் தலைமையிலான இந்தியக் குழுவினர், இலங்கை சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையிலான குழுவினரைச் சந்தித்தனர். இதன் போது, இந்தியாவின் நிலைப்பாட்டை இந்திய நாடாளுமன்ற சபாநாயகர் வெளிப்படுத்தியுள்ளார். இந்தச் சந்திப்பின் போது சிறிலங்காவின் புதிய அரசியலமைப்பை உருவாக்கும் முயற்சிகள் தொடர்பாக சிறிலங்கா சபாநாயகர் இந்தியக் குழுவினருக்கு விளக்கமளித்துள்ளார். (எ)

## யாழ் போதனா வைத்தியசாலை முன்பாக நாளை போராட்டம்

யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சையின் போது மரணமடையும் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்துச் செல்வதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. மருத்துவத் தவறுகளால் நிகழும் மரணங்களுக்கு எதிராகவும் அவ்வாறான மரணங்கள் எதிர்காலத்தில் நிகழாமல் தடுக்க வலியுறுத்தியும் அகிம்சை வழியிலான கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெறவுள்ளது. குறித்த போராட்டத்தை நாளை காலை 10 மணியளவில் யாழ் போதனா வைத்தியசாலை முன்றலில் நடத்தவுள்ளதாகத் தமிழ்த் தேசியப் பண்பாட்டுப் பேரவை தெரிவித்துள்ளது.

இது குறித்து பண்பாட்டுப் பேரவை விடுத்துள்ள அறிக்கையில்,

அரச வைத்தியசாலைகள் தரமிழந்து போகின்றது என்றால் அதை நம்பியிருக்கும் ஏழைகள் நிலைதான் என்ன?

மக்கள் விழிப்படைய வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த விடயங்களை பகிர வேண்டியுள்ளது - என்று கூறப்பட்டுள்ளது. (எ)

## 60 பொலிஸ் அதிகாரிகளுக்கு அதிரடி இடமாற்றம்

குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட 60 பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு இடமாற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு ஒழுக்க விரோத செயற்பாடுகளில் ஈடுபட்டு மக்கள் மத்தியில் அதிருப்திக்கு உள்ளான பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் 60 பேர் இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட உள்ளதாகப் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இந்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் தொடர்பில் ஏற்கெனவே தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்குத் தவவல் வழங்கப்பட்டுள்ளதாக அவர் கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

குறித்த பொலிஸ் நிலையப் பொறுப்பதி

## த.தே. கூட்டமைப்புக்கு எதிராக கூட்டணி



வரவிருக்கும் தேர்தல்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான கட்சிகளுடன் கூட்டணி அமைக்கும் முயற்சிகளில் நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈபிடிபி ஈடுபட்டுள்ளதாகக் கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வீ.ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி, வரதராஜப்பெருமாள் தலைமையிலான ஈபி.ஆர்.எல்.எவ். பத்மநாபா அணி, ரெலோவில் இருந்து பிரிந்த சிறிரெலோ அணி ஆகியவற்றுடன், ஈபிடிபி ஏற்கனவே பேச்சுக்களை ஆரம்பித்திருப்பதாகக் கூறப்படுகிறது. அதேவேளை வரவிருக்கும் கிழக்கு மாகாணசபைத் தேர்தலிலும், கூட்டணி அமைத்துப் போட்டியிட ஈபிடிபி திட்டமிட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. (எ)

## தேர்தல் ஆணைக்குழுவுக்கு எதிராக உச்ச நீதிமன்றில் மனு

தேர்தல் ஆணைக்குழுவிற்கு எதிராக பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில உச்ச நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

சபரகமுவ, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாண சபைகளுக்கான தேர்தல்களைக் கால தாமதமின்றி நடத்துமாறு கோரி இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அரசியல் சாசனத்தின் 78ஆம் சரத்தின் அடிப்படையில் இவ்வாறு தேர்தலை காலம் தாழ்த்த முடியாது என அவர் மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறு அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றைத் தாக்கல் செய்வதன் மூலம் தேர்தல்களை நடத்துமாறு வலியுறுத்த முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டில் கொள்ளையடித்து இலங்கைக்கு அனுப்பும் பணம்

வெளிநாட்டில் கொள்ளையடிக்கப்பட்ட பெருந்தொகைப் பணத்தின் ஒரு பகுதி இலங்கையின் வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தாய்வானின் பிரபல வர்த்தக வங்கி ஒன்றின் கணனி செயற்பாட்டுக்குள் ஊடுருவிய ஹெக்கர்களால் 600 மில்லியன் டொலர் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கொள்ளையடிக்கப்பட்ட பணம், பல நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தாய்வான் சைபர் பிரிவினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஹெக்கர்களினால் திருடப்பட்ட 600 மில்லியன் டொலரில் ஒரு தொகுதி பணம், இலங்கை வர்த்தக வங்கிகள் பலவற்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அனுப்பப்பட்ட பணத்தில் அதிகமான பணம் இலங்கை வங்கிக் கணக்கிலேயே வைப்புச் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கணக்கு மற்றும் குறித்த நபர்கள் தொடர்பில் குற்ற விசாரணைத் திணைக்களம் தற்போது விரைவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

சில வருடங்களுக்கு முன்னர் வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களின் வங்கிக் கணக்குகள், ஹெக்கர்களினால் ஊடுருவப்பட்டிருந்தன. இது தொடர்பில் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கு அமையக் குற்ற விசாரணை திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்திருந்தது.



இதன்போது சர்வதேச ஹெக்கர்களுடன் சம்பந்தப்பட்ட வலையமைப்பொன்று இலங்கையில் செயற்படுகின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (உ)

## விபத்தில் சிக்கிய பொலிஸ் அதிகாரி பலி

கேகாலை - கொழும்பு பிரதான வீதியில் கேகாலை, கொலஹெல பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த பொலிஸ் அதிகாரி பயணித்த மோட்டார் சைக்கிள் எதிரே வந்த தனியார் பஸ்ஸூடன் மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்த பொலிஸ் அதிகாரி கேகாலை வைத்தியசாலையில் சேர்க்கப்படும் போது உயிரிழந்துள்ளார்.

கேகாலை பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் 47 வயதுடைய உப பொலிஸ் பரிசோதகர் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

விபத்துத் தொடர்பில் பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் கேகாலைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (உ)

## 28 இலங்கையர்கள் நாடு கடத்தல்

இலங்கை பிரஜைகள் 28 பேர் இந்தோனேசிய அரசாங்கத்தால் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமான முறையில், ஆஸ்திரேலியாவுக்குச் செல்லும் நோக்கில் இந்தோனேசியாவில் தங்கியிருந்தபோது இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

இந்தோனேசியப் பொலிஸாரின் விசாரணைகளின் பின்னர் இலங்கைப் பிரஜைகள் அவர்கள் அனைவரும் இலங்கைக்குத் திருப்பியனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது. (உ)

## ஒருங்கிணைப்புக் குழுவின் தீர்மானங்கள் மீறல்!



பூநகரி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தீர்மானங்கள் மீறி முக்கொம்பன் வழியாக யாழ்ப்பாணத்துக்கு மணல் கொண்டு செல்லப்படுவதாக முக்கொம்பன் மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

முக்கொம்பன் கிராமத்திலிருந்து பத்தாங்கட்டை வரை கொங்கிறீட் பாதை அமைக்கப்பட்டுள்ளது. அவ்வழியாக நாள்தோறும் இருபதுக்கும் மேற்பட்ட மணல் டிப்பர்கள் பயணிப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

இதன் காரணமாக கொங்கிறீட் வீதி சேதமடைவதாக பூநகரிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவில் இணைத் தலைவர்களிடமும் அதிகாரிகளிடமும் கிராம மக்கள் சார்பாக முறைப்பாடுகள் செய்யப்பட்டன. அதன்போது டிப்பர்கள் இனி மணலுடன் பயணிக்காது என உறுதிமொழிகளும் வழங்கப்பட்டிருந்தன.

ஆனால் ஓராண்டு கடந்தும் தற்போதும் மணல் டிப்பர்கள் தமது கிராமம் வழியாகவே பயணிக்கின்றன எனவும் இதனால் அக்கராயனுக்கும் தமது கிராமத்துக்கும் இடையிலான நான்கு கிலோமீற்றர் வீதி பெருங் குன்றுங்குழியுமாக மாறியுள்ள நிலையில் குறித்த கொங்கிறீட் பாதையையாவது காப்பாற்ற வேண்டிய தேவை கிராம மக்களாகிய தமக்கு ஏற்பட்டுள்ளது எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (உ)

## பொலிஸ் உத்தியோகத்தர் கைது



ரோஹிங்ய முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்திய சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கைது செயப்பட்டுள்ளார்.

கொழும்புக் குற்ற விசாரணைப் பிரிவினர் குறித்த பொலிஸ் உத்தியோகத்தரைக் கைது செய்துள்ளனர். 40 வயதான பிரகீத் சானக குணதிலக்க என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

பாணந்துறை மகளிர் பாடசாலை அதிபரை மிரட்டியமை, பள்ளிவாசல் மீது தாக்குதல் நடத்தியமை உள்ளிட்ட மூன்று வழக்குகள் பாணந்துறை நீதிமன்றில் இந்தக் காவல் துறை உத்தியோகத்தருக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ளது. (உ)

## வைத்தியரைக் கடத்தி கொள்ளை முயற்சி

### இரு பெண்கள் உள்ளிட்ட ஐவர் கைது

வைத்தியர் ஒருவரைக் கடத்திச் சென்று அவரிடமிருந்த சொத்துக்களைக் கொள்ளையிட முயற்சித்த இரண்டு பெண்கள் உள்ளிட்ட ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு, கருவாத்தோட்ட பிரதேசத்தில் வசிக்கும் வைத்தியர் ஒருவரே இவ்வாறு கடத்தப்பட்டுள்ளார்.

வலான குற்றத் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் என்று அடையாளப்படுத்தியுள்ள சந்தேக நபர்கள் வைத்தியரிடமிருந்த தங்க மோதிரம் பணம் ஆகியவற்றைக் கொள்ளையிட முயற்சித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் பாணந்துறை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிய வந்துள்ளது. சந்தேக நபர்கள் இன்று நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட உள்ளதுடன், பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.(உ)

## வழிப்படுத்தல் பலகைகளில் தமிழ் எழுத்துப் பிழைகள்




பலர் வந்து செல்லும் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தமிழ் எழுத்துப் பிழைகளுடன் கூடிய விளம்பரப்படுத்தல்கள் காணப்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறாக அரச அலுவலகங்கள் உள்ளிட்ட இடங்களில் அரசாங்கத்தின் வழிப்படுத்தல் பலகைகளில் தமிழ் எழுத்துப் பிழைகள் காணப்படுவது தொடர்ச்சியாகச் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது.

இலங்கை அரசாங்கம் மும் மொழிக் கொள்கைகளை அமுல்ப்படுத்துவதாகக் கூறுகின்ற போதிலும் தமிழ் மொழியின் எழுத்துப் பிழைகள் தொடர்ச்சியாக குறைவடையாது காணப்படுவது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மும்மொழி மற்றும் இன நல்லிணக்கத்துக்கு என தனியான அமைச்சு ஒன்றும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.(உ)

## நாடு கடத்தப்பட்டவர் கைதாகி விடுதலை

கடல் வழியாக ஆஸ்திரேலியாவுக்குள் சென்று அங்கிருந்து திருப்பி அனுப்பி வைக்கப்பட்ட ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் நேற்று மினுவாங்கொட நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். அவரை ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் விடுவிக்குமாறு நீதவான் ஷிலானி சத்துரந்தி பெரேரா உத்தரவிட்டுள்ளார்.

மேலும் சந்தேக நபரை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி மினுவாங்கொடை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. கடந்த 2012ஆம் ஆண்டு திருகோணமலையில் இருந்து ஆழ்கடல் மீன்பிடி படகு மூலம் சந்தேக நபர் ஆஸ்திரேலியாவுக்குச் சென்றுள்ளார்.

ஆஸ்திரேலியாவில் சில காலம் தொழில் புரிந்து வந்த சந்தேக நபரை அந்த நாட்டுப் பொலிஸார் கைது செய்து இலங்கைக்கு நாடு கடத்தியுள்ளனர். (உ)

## ஜனாதிபதியின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்த முயற்சி

ஜனாதிபதியின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்த முயற்சிக்கப்படுவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் முன்னணித் தலைவர் சாந்த பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். மத்திய வங்கிப் பிணைமுறி மோசடி தொடர்பில் ஜனாதிபதி விசேட ஆணைக்குழு ஒன்றை நியமித்த காரணத்தினால் இவ்வாறு ஜனாதிபதிக்கு எதிராகக் குற்றம் சுமத்த முயற்சிக்கின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.



சில குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடையவர்கள் ஜனாதிபதிக்கு எதிரான செயற்பாட்டில் ஈடுபட முயற்சிக்கின்றனர் என அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (உ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## லாஸ் வேகாஸ் படுகொலை: சந்தேகத்தில் மேலும் ஒருவர்

லாஸ் வேகாஸ் படுகொலை தொடர்பில் தற்கொலை செய்து கொண்ட குற்றவாளியின் அறையில் அவருடன் மேலும் ஒருவர் இருந்திருக்க வாய்ப்பு உள்ளதாகப் பொலிஸார் சந்தேகம் எழுப்பியுள்ளனர். கடந்த ஞாயிறு இரவு அமெரிக்காவின் லாஸ் வேகாஸ் நகரில் 58 பேரைப் பலிவாங்கிய கொடூர துப்பாக்கி சூட்டுச் சம்பவம் நடந்தது. இதில் குறித்த படுகொலையில் ஈடுபட்ட நபர் அவர் தங்கியிருந்த ஹொட்டேல் அறையிலேயே தற்கொலை செய்து கொண்டதாகப் பொலிஸார் தெரிவித்திருந்தனர். இந்த நிலையில், அந்த நபருடன் மேலும் சிலருக்கு இந்த விவகாரத்தில் தொடர்பு இருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் எழுப்பியுள்ளனர். அல்லது, முக்கிய குற்றவாளியான தற்கொலை செய்து கொண்ட ஸ்டீபன் படொக் தங்கியிருந்த அறையில் ,விருந்தினர்கள் சிலர் வந்து சந்தித்துச் சென்றிருக்கலாம் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலும், குறித்த நபரின் அறை அட்டையைப் பல முறை மர்ம நபர்கள் பயன்படுத்தியதாகவும் தெரிய வந்துள்ளது. மேலும் அவரது அறையில் இருந்து கண்டெடுக்கப்பட்ட மொபைல் சார்ஜர், அவர் பயன்படுத்தியது அல்ல எனவும் விசாரணையில் தெரிய வந்துள்ளது. (பி)

## எமனாகும் மிகை நேர வேலை

பணியாளர்களை அளவுக்கு அதிகமாக மிகை நேரப் பணியில் ஈடுபடுத்தியதால் டெண்ட்சு என்ற ஜப்பானிய விளம்பர நிறுவனத்திற்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. மேலும் நாடு முழுவதும் இத்தகைய வழக்கம் பரவி வரும் நிலையில் அதனைக் கட்டுபடுத்தும் விதமாக இந்த நடவடிக்கை இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தொழிலாளர் சட்ட விதிகளை மீறியதற்காக டோக்யோ நீதிமன்றம் அந்த நிறுவனத்துக்கு 4,400 அமெரிக்க டாலர்களை அபராதமாக விதித்து வெள்ளிக்கிழமை உத்தரவிட்டது. கடந்த 2015ஆம் ஆண்டு மத்சுரி டகாஹஷி என்ற இளம் பணியாளர் தற்கொலை செய்து கொண்டதற்கு பின் ,ஜப்பானின் மிகைப் பணிக் கலாசாரம் தொடர்ந்து கவனிக்கப்பட்டு வருகிறது. டகாஹஷி தற்கொலை செய்து கொள்வதற்கு முந்தைய ஒரு மாதத்தில் வேலை நேரத்தைத் தாண்டி 100 மணி நேரம் மிகை நேர வேலை பார்த்துள்ளார் என்றும் அதிக வேலை பளு அவர் தற்கொலை செய்து கொள்ள வழி செய்தது என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

### தீவிரவாதத்துக்கு எதிராக இணைகின்றன

# இந்தியா, ஐரோப்பிய ஒன்றியம்



தீவிரவாதத்துக்கு எதிரான நடவடிக்கையில் இணைந்து செயல்பட இந்தியாவும், ஐரோப்பிய ஒன்றியமும் முடிவு செய்துள்ளன. ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் டொனால்டு பிரான் சிஸ்ஜக் டஸ்க், ஐரோப்பிய ஆணைக்குழுத் தலைவர் ஜூன் கிளாடி ஆகியோர் பிரதமர் நரேந்திர மோடியை டெல்லியில் நேற்று சந்தித்துப் பேசினர். அப்போது பிரதமர் மோடியும் ஐரோப்பிய ஒன்றிய தலைவர்களும் நிருபர்களுக்கு கூட்டாகப் பேட்டியளித்த போதே இந்த முடிவு தெரிவிக்கப்பட்டது. அதிலே,பிரதமர் மோடி கூறியபோது, பாதுகாப்பு, தீவிரவாதத்துக்கு எதிரான நடவடிக்கையில் இணைந்து செயல்பட முடிவு செய்துள்ளோம் என்றார். ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்கள் கூறியபோது, ஆன்லைன் மூலமாக தீவிரவாத அமைப்புகளுக்கு ஆள்சேர்ப்பதை தடுப்பது, ஆயுத விநியோகத்தை தடுத்து நிறுத்துவது ஆகியவற்றில் இந்தியாவுடன் இணைந்து செயல்படுவோம் என்றனர். இந்தியா, ஐரோப்பிய ஒன்றியம் இடையே தடையில்லா வர்த்தக ஒப்பந்தத்தை அமுல்படுத்த நீண்ட காலமாகப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது. ஆனால் இந்த விவகாரத்தில் இதுவரை முன்னேற்றம் ஏற்படவில்லை எனவும் தெரிவித்தனர். (பி)

# ஜேர்மனியில் சேவியர் புயல்




ஜேர்மனியில் வீசிய சேவியர் புயலுக்கு இது வரையிலும் ஏழு பேர் பலியாகியுள்ளனர். வடக்கு ஜேர்மனியில் வீசிய சேவியர் புயலால் ஹம்பெர்க் நகரில் புயலின் தாக்கம் அதிகமாக இருந்துள்ளது. இந்தப் புயலுக்கு இதுவரையில் ஏழு பேர் பலியாகியுள்ளனர், பத்துக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். பல இடங்களில் மரங்கள் வேருடன் சாய்ந்துள்ளதால் ரயில், விமானப் போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது. வனவிலங்கு சரணாலயங்கள் முழுமையாக சேதமடைந்துள்ளதால் மூடப்பட்டுள்ளன. எனினும் மீட்புப் பணிகள் விரைவாக நடந்து வருவதால் மக்கள் விரைவில் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவார்கள் என அரசு தெரிவித்துள்ளது.

### ஐ.எஸ். தீவிரவாதிகளின்

# தாக்குதலை தடுத்த பொலிஸார்




அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் ஐ.எஸ். ஆதரவாளர்கள் சிலர் மேற்கொள்ளவிருந்த பயங்கரவாதத் தாக்குதலை உரிய நேரத்தில் முறியடித்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். குறித்த விவகாரம் தொடர்பில் கனேடியர் உள்ளிட்ட 3 நபர்களைக் கைது செய்துள்ள பொலிஸார், உரிய நேரத்தில் மேற்கொண்ட நடவடிக்கையால் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். கைதான நபர்களில் ஒருவர், சுரங்கப்பாதைப் பயன்பாட்டாளர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டும் எனவும், பயணிகள் மீது தற்கொலைத் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டதாகவும் தெரிய வந்துள்ளது. பிடிபட்ட கனேடியரிடம் மேற்கொண்ட விசாரணையில், மீண்டும் செப்ரெம்பர் 11 ஆம் திகதி தாக்குதலை முன்னெடுக்கத் தாங்கள் முயன்றதாகவும், தங்களிடம் துப்பாக்கி இல்லாமல் போனது நியூயார்க் மக்களின் அதிர்ஷ்டம் எனவும் தெரிவித்துள்ளார். ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பின் ஆதரவாளரான குறித்த கனேடியர் நியூயார்க் நகரில் தாக்குதல் நடத்தத் திட்டம் தீட்டியவர் எனத் தெரிய வந்துள்ளது. கனேடியரான அப்துல்ரஹ்மான் எல் பஹ்னாசா நியூயார்க்கில் தாக்குதல் நடத்தும் பொருட்டு நியூ ஜெர்சி பகுதியில் இருந்து பயணப்பட்டு வந்த நிலையில் பொலிஸாரிடம் சிக்கியுள்ளதாகக் கூறப்படுகிறது. கைதானவர்களில் இன்னொரு நபர் பாகிஸ்தானில் குடியிருக்கும் அமெரிக்கர் எனவும், மூன்றாவது நபர் பிலிப்பைன்ஸ் நாட்டவர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (பி)

# அதிகரிக்கும் மர்மக் கொலைகள்

மத்திய அமெரிக்காவிற்குச் சுற்றுலா செல்லும் கனடா நாட்டினர் தொடர்ச்சியாக மர்மமான முறையில் சுட்டுக்கொல்லப்படும் சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ரொறன்ரோ நகரை சேர்ந்த கேப்ரியல் போக்னியா என்பவர் தனது மனைவி மற்றும் 3 பிள்ளைகளுடன் பெல்லிஸ் நாட்டுக்குச் சுற்றுலா சென்றுள்ளார்.
நகரில் உள்ள குடியிருப்பு ஒன்றில் தங்கியிருந்த போது அந்தக் கொடூர சம்பவம் நிகழ்ந்துள்ளது. நேற்று அதிகாலை நேரத்தில் நடைப் பயிற்சிக்காக வீட்டை விட்டு வெளியே சென்றபோது மர்ம நபர் ஒருவர் கேப்ரியலை நோக்கிச் சரமாரியாகத் துப்பாக்கியால் சுட்டுள்ளார். துப்பாக்கிச் சத்தம் கேட்டு அலறியடித்து ஓடிவந்த கேப்ரியலின் மனைவியையும் துப்பாக்கியால் சுட்டுவிட்டு மர்ம நபர் தப்பியுள்ளார். இந்தச் சம்பவத்தில் கேப்ரியல் அதே இடத்தில் இரத்த வெள்ளத்தில் பலியாகியுள்ளார். அவரது மனைவி தற்போது சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். கடந்த ஏப்ரல் மாதம் 52 வயதான கனேடிய பெண் ஒருவர் அமெரிக்க நண்பருடன் இதே நகரில் தங்கியபோது இருவரும் மர்மமான முறையில் கொல்லப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (பி)

### பிரித்தானிய பிரதமரை பதவி நீக்க

# கடிதம் கொடுத்த நபர்




பிரித்தானிய பிரதமரை வேலையில் இருந்து நீக்க வேண்டும் என்று, பிரதமரிடமே நகைச்சுவை நடிகர் பரிந்துரைக் கடிதம் கொடுத்த சம்பவம் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. பிரித்தானியா பிரதமர் தெரசா மே, தனது கட்சியின் வருடாந்தக் கூட்டத்தில் உரை நிகழ்த்திக் கொண்டிருந்தார். அப்போது அங்கு பலரும் கூடியிருந்த வேளையில், லீநெல்சன் என்ற காமெடி நடிகர், தெரசா மே-விடம் கடிதம் ஒன்றைக் கொடுத்தார்.
அந்தக் கடிதம் பிரித்தானியாவில் வேலையில் இருந்து ஒருவரை நீக்குவதற்குப் பரிந்துரை செய்யப்படும் பி45 என்ற கடிதம், அதில் பிரித்தானிய பிரதமர் தெரசா மே-வை வேலையிலிருந்து நீக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் கடிதத்தை வாங்கிய தெரசா மே, அதை கீழே வைத்துவிட்டு உரையைத் தொடர்ந்துள்ளார். அப்போது லீநெல்சன் பிரித்தானியாவின் பிறிக்ஸ்ஸி விவகாரத்தில் தெரெசா மேயுடன் ஏற்பட்ட முரண்பட்ட கருத்து வேறுபாடின் காரணமாக வெளியுறவு அமைச்சர் பொறிஸ் ஜோன்சன் இந்தக் கடிதத்தைப் பிரதமரிடம் கொடுக்கச் சொன்னதாகக் கூறியதால் சிறிது நேரம் சலசலப்புஏற்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசத்தல் ஆரம்பம்!



கருணாரத்னேவின் சதம் கைகொடுக்க இலங்கை அணி, பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் பலமான கட்டத்தை எட்டியுள்ளது.

இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் இரு டெஸ்ட்கள், 5 ஒருநாள் போட்டிகள் மற்றும் 3 இருபது-20 போட்டிகள் கொண்ட கிரிக்கெட் தொடர் டுபாயில் நடைபெற்று வருகின்றது.

இதில், டெஸ்ட் போட்டிகள் முதலில் நடைபெற்று வருகின்றன. முதலாவது போட்டியில் இலங்கை அணி அசத்தல் வெற்றி பெற்றது.

இந்த நிலையில், இரண்டாவது டெஸ்ட் போட்டி நேற்று பகல் - இரவு ஆட்டமாகத் தொடங்கியது.

இதில், இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

அதன்படி தனது ஆட்டத்தைத் தொடங்கிய இலங்கை அணி, 63 ஓட்டங்களைச் சேர்த்த வேளை, சில்வாவை (27) பறிகொடுத்தது. பின்னர் 131 ஓட்டங்களுடன் இருந்த போது சமரவிக்ரம (38) ஆட்டமிழந்தார்.

அவரைத் தொடர்ந்து அடுத்த விக்கெட்டாக மெண்டிஸ் (1) அதிர்ச்சி கொடுத்து வெளியேறினார்.


ஒருமுனையில் விக்கெட்டுகள் சாய்ந்தபோதும் மறுமுனையில் நிலைத்து நின்று ஆடிய கருணாரத்னே சதமடித்து அசத்தினார். இவருடன் மறுமுனையில் இணைந்த சண்டிமாலும் பொறுமையாக ஆடி விக்கெட் சரிவை நிறுத்தினார்.

இறுதியில் நேற்று ஆட்ட நேரம் முடியும்போது 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 254 ஓட்டங்களைச் சேர்த்துப் பலமான நிலையில் இருந்தது இலங்கை அணி.

களத்தில் கருணாரத்னே (133), சண்டிமால் (49) ஆகியோர் ஆட்டமிழக்காது இருந்தனர்.

இன்று ஆட்டத்தின் இரண்டாவது நாளாகும். (ஐ)

# இருபது-20 சமர் இன்று





இந்தியா-ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான முதலாவது இருபது-20 பொட்டி இன்று இரவு நடைபெறவுள்ளது.

ஸ்டீபன் ஸ்மித் தலைமையிலான ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி இந்தியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது.

இதில், ஒரு நாள் தொடரை 1-4 என்ற கணக்கில் இழந்தது. இந்த நிலையில், 3 போட்டிகளைக் கொண்ட இருபது-20 கிரிக்கெட் தொடரில் பங்கேற்கிறது.

இதன்படி இந்தியா-ஆஸ்திரேலியா இடையிலான முதலாவது இருபது-20 கிரிக்கெட் போட்டி ஜார்கண்ட் மாநிலம் ராஞ்சியில் இன்றிரவு 7 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. (ஐ)



# காலிறுதியில் ரேஞ்சர்ஸ்

திக்கம் மத்திய சன சமூக நிலையம் நடத்திவரும் உதைபந்தாட்டத் தொடரின் காலிறுதிக்கு முன்னேறியது கொற்றாவத்தை ரேஞ்சர் விளையாட்டுக்கழகம்.

திக்கம் மத்திய சன சமூக நிலையம் நடத்திவரும் உதைபந்தாட்டத் தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்துக் கொற்றாவத்தை ரேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.

இந்த ஆட்டத்தில் சிறப்பாக ஆடிய ரேஞ்சர் விளையாட்டுக் கழகம், நஜித் (2 கோல்கள்) , கைலாஸ் (1) மற்றும் மாதுஜன் (1) ஆகியோரின் அபார கோல்கள் வலுச்சேர்க்க, 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, தொடரின் காலிறுச் சுற்றுக்கு முதல் அணியாகக் காலடி எடுத்து வைத்தது. (ஐ)

# ‘மெர்சல்’ நாயகிக்கு டும் டும் டும்

‘பாணா காத்தாடி’ படத்தில் கதாநாயகியாக அறிமுகமானவர் சமந்தா. ‘நான் ஈ’, ‘நீதானே என் பொன்வசந்தம்’, ‘கத்தி’, ‘10 எண்றதுக்குள்ள’, ‘தங்கமகன்’, ‘24’, ‘தெறி’ உள்ளிட்ட பல படங்களில் நடித்துள்ளார். தற்போது விஜய் ஜோடியாக ‘மெர்சல்’ படத்தில் நடித்து முடித்துள்ளார். இதேவேளை, தெலுங்குப் பட உலகிலும் முன்னணி கதாநாயகியாக இருக்கிறார்.

கௌதம் வாசுதேவ் மேனன் இயக்கிய ‘விண்ணைத்தாண்டி வருவாயா’ படம் தெலுங்கில் ‘ஏம் மாய சேஸாவே’ என்ற பெயரில் தயாரானபோது அதில் த்ரிஷா வேடத்தில் சமந்தா நடித்தார். அந்தப் படத்தில் கதாநாயகனாக நாகார்ஜுனாவின் மகன் நாக சைதன்யா அறிமுகமானார். அப்போது இருவருக்கும் நெருக்கம் ஏற்பட்டுக் காதல் மலர்ந்தது.

இந்த நிலையில், நேற்று இருவருக்கும் கோவாவில் திருமணம் நடைபெற்றது. இரு குடும்பங்களையும் சேர்ந்த 150 பேர் மாத்திரமே திருமணத்துக்கு வந்திருந்தனர்.

நேற்று நள்ளிரவு 11.52 மணிக்கு இந்து முறைப்படி சமந்தா கழுத்தில் நாகசைதன்யா தாலி கட்டினார். உறவினர்கள் அட்சதை தூவி வாழ்த்தினார்கள். கோவாவிலேயே இன்று மாலை 5.30 மணிக்கு கிறிஸ்தவ முறைப்படி இருவரும் மோதிரம் மாற்றித் திருமணம் செய்து கொள்ளவுள்ளார்கள். (ஒ)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பல கோடிக்கு விலை போன தொலைக்காட்சி உரிமம்

விஜய் நடித்துவரும் ‘மெர்சல்’ படம் வெளியீட்டுத் திகதியை நெருங்க நெருங்க அது குறித்த எதிர்பார்ப்பும் அதிகரித்துள்ளது.

இந்தப் படத்துக்குத் தணிக்கைக் குழுவினர் யு/ஏ சான்றிதழ் கொடுத்து படக்குழுவையும், ரசிகர்களையும் சந்தோஷப்படுத்தியுள்ளனர்.

இதன்தொடர்ச்சியாக, ‘பொக்ஸ் ஒபிஸில்’ பல சாதனைகளைப் படைக்கும் என எதிர்பார்க்கப்படும் இப்படத்தின் உரிமையை ஜீ தொலைக்காட்சி வாங்கியுள்ளது.

அதுவும் இந்திய மதிப்பில் 28 கோடி ரூபா கொடுத்து வாங்கியுள்ளது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஒ)



# ‘அந்த அளவுக்கு நல்ல பிகர் இல்லை’

தமிழகத்தைக் கலக்கிய ஜல்லிக் கட்டில் வீரத் தமிழச்சி என்ற பெயர் வாங்கிய ஜூலி, ‘பிக்பாஸ்’ நிகழ்ச்சியில் மோசமான பெயரைப் பெற்றார்.

இவர், நிகழ்ச்சி முடிந்து தற்போது நிறையப் பேட்டிகள் கொடுத்து வருகிறார். அதில் ஒரு பேட்டியில்,

“உங்களுக்கு யாரிடமிருந்தாவது காதல் கடிதம் வந்ததா?” என்று கேட்டதற்கு அவர்,

“எனக்கு அப்படி ஒன்றும் வரவில்லை நான் அந்த அளவுக்கு நல்ல பிகர் கிடையாது.

ஆனால் என்னுடைய கல்லூரிப் படிப்பின் போது சில காதல் கடிதங்கள் வந்தது உண்மைதான் என்று கூறியுள்ளார். (ஒ)

# ரயில் பாதைகள் புனரமைப்பு




பிரதான ரயில் பாதைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. இது தொடர்பில் கொழும்பு புறநகர் ரயில்வே செயற்றிட்டத்துக்கான பூர்வாங்கச் சாத்தியக்கூற்று அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. 2035ஆம் ஆண்டளவில் ரயில் போக்குவரத்துக்கான தேவையை கருத்தில் கொண்டு இந்தச் செயற்றிட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது. பிரதான ரயில் பாதை, களனிவெளி ரயில் பாதை, கரையோர ரயில் பாதை, புத்தளம் ரயில் பாதை என்பன இந்தத் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. (உ)

# அழுகிய நிலையில் சடலம் மீட்பு

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி பகுதியில் உள்ள பாழடைந்த கிணற்றில் இருந்து ஆண் ஒருவரின் சடலம் அழுகிய நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக களுவாஞ்சிகுடிப் பொலிஸார் தெரிவித்தனர். நேற்று வெள்ளிக்கிழமை மாலை சடலம் மீட்கப்பட்டுள்ளது. களுவாஞ்சிக்குடி - எருவில் பெற்றோல் நிரப்பு நிலையத்துக்கு அருகில் கைவிடப்பட்ட நிலையில் உள்ள காணியொன்றில் உள்ள கிணற்றில் இருந்து துர்நாற்றம் வீசியுள்ளது. இது தொடர்பில் பிரதேசத்தில் இருந்தவர்களினால் பொலிஸ் அவசர நிலையத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து குறித்த பகுதிக்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டதோடு குறித்த பகுதியில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றர். (உ)

# இன்றைய கருத்தோவியம்




# அம்பாந்தோட்டை ஆர்ப்பாட்டம் 28 பேருக்கு விளக்கமறியல்



அம்பாந்தோட்டைப் பிரதேசத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது நேற்று கைது செய்யப்பட்ட 28 பேரும் எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அமைதிக்குக் குந்தகம் ஏற்படுத்தியமை மற்றும் பொது சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுக்களில் இவர்கள் 28 பேரும் கைது செய்யப்பட்டனர். கூட்டு எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவம் செய்யும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட குழுவினரால் ஹம்பாந்தோட்டையில் உள்ள இந்தியத் துணைத் தூதுவராலயத்துக்கு முன்னால் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தின்போது ஏற்பட்ட அமைதியின்மையில் 4 பொலிஸ் உத்தியோகத்தர்களும் காயமடைந்திருந்ததாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் கூறியுள்ளது. (உ)

### நாடு கடத்தப்பட்டவர்

# பிணையில் விடுதலை

போலிக் கடவுச் சீட்டைப் பயன்படுத்தி இத்தாலி சென்ற ஒருவர் நேற்று நாடு கடத்தப்பட்டார். இந்த நிலையில் கட்டுநாயக்க விமான நிலையத்தில், குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்ட அவர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதன் பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். குறித்த நபர் இவ்வாறு போலிக் கடவுச்சீட்டை பயன்படுத்தி இத்தாலி சென்று அங்கு, போலி அடையாள அட்டை ஒன்றை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் அந்த நாட்டு விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டு திருப்பியனுப்பப்பட்ட நிலையிலேயே, கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மினுவன்கொட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதன் பின்னர் 10,000 ரூபா ரொக்கப் பிணையிலும், ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணைகளிலும் விடுதலை செய்யப்பட்டுள்ளார். (உ)

# விபத்தில் காயமுற்றவர் வைத்தியசாலையில் மரணம்

திம்புள்ள பத்தனைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹட்டன் நுவரெலியா பிரதான வீதியில் கொட்டகலை பகுதியில் கெப் வண்டியில் மோதுண்ட ஒருவர் உயிரிழந்துள்ளதாக திம்புள்ள பத்தனைப் பொலிஸார் தெரிவித்தனர். கொட்டகலை டிரேட்டன் தோட்டத்தைச் சேந்த 70 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தந்தையான எஸ்.சண்முகம் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். கொட்டகலை நுவரெலியா பிரதேச சபைக் கருகிலே பாதையைக் கடக்க முற்பட்ட போது லிந்துலையிலிருந்து கொட்டகலை நோக்கி வந்த கெப் வண்டியில் மோதுண்டு விபத்து இடம்பெற்றுள்ளது. கெப் வண்டியில் மோதுண்டவர் கொட்டகலை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா மாவட்ட வைத்திய சாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று இரவு மரணமானதாக வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்தனர். (உ)

# தேர்தல் கருத்தரங்கு

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்துவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளில் தேர்தல்கள் ஆணைக்குழு மும்முரமாக ஈடுபட்டுள்ளது. இந்த நிலையில் கட்சிகளுக்கு விளக்கமளிக்கும் கருத்தரங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில் ஐக்கிய தேசியக் கட்சியின் அங்கத்தவர்களுக்கு விளக்கமளிக்கும் கருத்தரங்கு இன்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. தேர்தல்கள் ஆணைக்குழுவின் மேலதிக ஆணையாளர் எம்.எம். முஹமட் இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் ஜனவரி மாதத்துக்குள் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடத்தப்படவுள்ளதால் அதற்குரிய பூர்வாங்கப் பணிகளை ஆணைக்குழு முன்னெடுத்துள்ளது. உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட திருத்தச்சட்டம் உள்ளடங்கலான விடயங்களை அரசியல் கட்சிகளுக்கு தெளிவுபடுத்தும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே ஹெல உறுமய மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆகியவற்றுக்கான தெளிவுபடுத்தும் கருத்தரங்குகள் நிறைவடைந்துள்ள நிலையில் இன்று ஐக்கிய தேசியக் கட்சியின் அங்கத்தவர்களுக்கான கருத்தரங்கு நடைபெற்றது என்றார். (உ)

# 3,275 இடங்களில் மண்சரிவு அபாயம்!

மண்சரிவு அனர்த்தம் ஏற்படக்கூடிய பிரதேசங்களை கண்டறியும் நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதாகத் தேசியக் கட்டட ஆராய்ச்சி நிறுவகம் அறிவித்துள்ளது. அதனடிப்படையில், இதுவரையிலும் 3,275 இடங்கள் இனங்காணப்பட்டுள்ளன என்றும் அந்த நிறுவகம் தெரிவித்துள்ளது. மண்சரிவு அபாயம் ஏற்படும் என்று இனங்காணப்பட்டுள்ள இடங்களில், இரண்டாயிரம் குடும்பங்கள் வாழ்வதாகவும் அந்த நிறுவகம் சுட்டிக்காட்டியுள்ளது. (உ)

# எல்லை நிர்ணய பணிகள் ஆரம்பம்

மாகாண சபைகளின் எல்லை நிர்ணயம் தொடர்பான குழுவின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான அறிக்கை, அடுத்த வருடம் ஜனவரி மாதம் 15ஆம் திகதி அரசாங்கத்துக்குச் சமர்ப்பிக்கப் படுமென்று இதற்கான குழுவின் தலைவர் கே.தவலிங்கம் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதற்கான குழுவை அண்மையில் நியமித்தார். எல்லை நிர்ணயத்துக்காக குழுவுக்கு மூன்று மாதகால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. ஒன்பது மாகாணங்களினதும் எல்லை நிர்ணயப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தற்சமயம் கலைக்கப்பட்டுள்ள வடமத்திய, சப்ரகமுவ, கிழக்கு மாகாண சபைகள் பற்றி இதன்போது கூடுதல் கவனம் செலுத்தப்படவிருக்கிறது. உரிய மாகாண சபைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகள் எண்ணிக்கை அடங்கிய தகவல்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளன. எல்லை நிர்ணயத்தின்போது பொது மக்களின் கருத்துக்கள் பெற்றுக் கொள்ளப்படவிருக்கின்றன. இது தொடர்பான அறிவித்தல் வார இறுதி நாட்களில் வெளியாகும் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படவிருப்பதாக இதற்கான குழுவின் தலைவர் கே.தவலிங்கம் மேலும் தெரிவித்தார். (உ)

# ஆசிரியர்களுக்கு பல்வேறு வேலைத்திட்டம்

ஆசிரியர்களின் நலன்கருதி கல்வி அமைச்சு பல வேலைத்திட்டங்களை அமுலாக்கி இருப்பதாகக் கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார். தேசிய ஆசிரியர் தினத்தை முன்னிட்டு நேற்று விடுத்துள்ள விசேட செய்தியில் குறிப்பிட்ட அவர் ஆசிரியர்கள் வழங்கும் சேவையின் பெறுமதியை ஒரு தினத்துக்கு மாத்திரம் மட்டுப்படுத்த முடியாதென்றும் கல்வி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் மேலும் குறிப்பிட்ட அவர், கடமைக்காக வரும் கர்ப்பிணிப் பெண்களான ஆசிரியைகளுக்கு வசதியான ஆடை அறிமுகம் செய்யப்படும். ஆசிரியர்களுக்கு உள்நாட்டு, வெளிநாட்டு பயிற்சிகள் வழங்கப்படும். புதிய ஆசிரியர் விடுதிகளும், பயிற்சி நிலையங்களும் நிர்மாணிக்கப்படும். ஆசிரியர் மற்றும் ஆசிரியைகளின் பொருளாதாரத்தை வலுப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது எனவும் கல்வியமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (உ)

## நாளை நாளும் கோளும்

08.10.2017 ஞாயிற்றுக்கிழமை ஏவிளம்பி வருடம் புரட்டாதி மாதம் 21 ஆம் நாள்


திருதியை மு.இ. 07.46 வரை | பரணி மு.இ. 07 - 17 வரை | சித்தயோகம்

இராகுகாலம் 04.32 - 06.02 | சுபநேரம் 09.02 - 10.32 | எமகண்டம் 12.02 - 01.32

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| முயற்சி | உதவி | நன்மை | இலாபம் | ஆக்கம் | வரவு | யோகம் | இன்பம் | உயர்வு | குழப்பம் | மறதி | நட்டம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்த நாள் ஞாபகம்.....!




**1874.10.07**

1874 - யாழ்ப்பாணத்துக்கான தந்தி இணைப்பு அநுராதபுரம் வரையில் நீடிக்கப்பட்டது.

## கப்பல் திருவிழா





நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலய கப்பல் திருவிழாவின் கப்பலாட்டும் நிகழ்வு இன்று அதிகாலை இடம் பெற்றது. (உ-03)

## நூற்றாண்டு விழா நிறைவு நிகழ்வு





யாழ்.விக்னேஸ்வரா கல்லூரி நூற்றாண்டு நிறைவு நிழா இன்று காலை 9மணியளவில் நடைபெற்றது. முதலமைச்சரின் வாழ்த்துரையை சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட வடக்கு மாகாண கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன் வழங்கினார்.இதன்போது நூற்றாண்டு விழா சிறப்பு மலரும் வெளியிடப்பட்டது. (உ)

## மர்ம முறையில் குடும்பப் பெண் மரணம்

மட்டக்களப்பு, களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட களுதாவளையில் மர்மமான முறையில் குடும்பப் பெண்ணொருவர் உயிரிந்துள்ளாரென, களுவாஞ்சிகுடி பொலிஸார் தெரிவித்தனர். களுதாவளை ஸ்ரீ முருகன் ஆலய வீதியில் உள்ள வீடொன்றில் வசித்துவந்த ஒரு பிள்ளையின் தாயான 27 வயதுடைய அகிலேஸ்வரன் புஸ்ப்பராணி என்பவரே, இன்று காலை மர்மமான முறையில் உயிரிந்துள்ளாரென, பொலிஸார் தெரிவித்தனர்.
உயிரிழந்த பெண்ணின் குழந்தையின் பலத்த அழுகுரலை அவதானித்த வீதியில் சென்றவர்கள், உள்ளே சென்று பார்த்தவுடன் குறித்த குழந்தையின் தாய் உயிரிழந்து கிடந்துள்ளார். இது குறித்து பொதுமக்கள், பொலிஸாருக்கு வழங்கி தகவலையடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். உயிரிழந்த பெண்ணின் கணவரும், அவரது தாயும் வெளிநாடுகளில் தொழில் புரிந்து வரும் நிலையில், மேற்படி பெண்ணும் அவரது 5 வயதுடைய பெண் குழந்தையும், பெண்ணின் தந்தையும் குறித்த வீட்டில் வசித்து வந்துள்ளனர்.
குறித்த பெண்ணின் தந்தை வெல்லா வெளியில் அமைந்துள்ள அவர்களது உறவினர்களின் வீட்டுக்கு, நேற்று சென்றுள்ள நிலையிலேயே, இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. (உ)

## மத்திய மாகாண தமிழ் சாகித்ய விழா





“அறிவு பெருக்கி ஆற்றல் மிகுவோம்” என்ற தொனிப்பொருளில் மத்திய மாகாணத் தமிழ் சாகித்திய விழா நுவரெலியா மாநகரில் இன்று காலை ஆரம்பிக்கப்பட்டது. இந்த விழா நுவரெலியா பழைய கடை வீதி முற்றத்திலிருந்து ஊர்வலமாக ஆரம்பிக்கப்பட்டது. இதில் மத்திய மாகாண ஆளுநர் மற்றும் அமைச்சர், மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச செயலாளர், அரச முக்கியஸ்தர்கள் கல்வி அதிகாரிகள், எனப் பலர் கலந்து கொண்டனர். இரண்டு நாட்கள் தொடர்ந்து நடைபெறும் இந்த சாகித்ய விழா மத்திய மாகாண விவசாய மற்றும் இந்து கலாசார, தமிழ் கல்வி அமைச்சர் ரமேஷ் தலைமையில் நடைபெறுகின்றது. (உ)

## உபகரணங்கள் வழங்கல்





யாழ்ப்பாணம் இந்துக் கல்லுரியின் 1994 சாதாரணதரம் மற்றும் 1997 ஆம் ஆண்டு உயர்தரத்தில் கல்வி கற்று உயிர்நீத்த மாணவர்களால் உதவித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்பொருட்டு மாற்றுவலுவுடையோருக்கானபிரைலி உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் இரத்த தான நிகழ்வும் இன்று நடைபெற்றது. தர்மபுரம் கிளிநொச்சியிலுள்ள மானிடம் அறக்கட்டளையின் சைவநெறிக் கூடத்தில் குறித்த நிகழ்வுகள் நடைபெற்றன. (உ)

NOOLAHAM FOUNDATION

# ஆய்வாளர்கள் தேவை

**நூலக நிறுவனத்தில் ஆய்வுசார் ஆவணப்படுத்தல் பணிகளில் ஈடுபட இரு புதிய ஊழியர்களை இணைக்கவுள்ளோம். ஆய்வு ஆவணப்படுத்தலில் ஆர்வமுள்ளோர் விண்ணப்பிக்கலாம். நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர், கள ஆய்வாளர்கள் தேவைப்படுகின்றனர். மேலதிக விபரங்களை பின்வரும் இணைப்பில் பெற்றுக்கொள்ளலாம்.**

www.noolahamfoundation.org/web/en/careers

**தொடர்புகளுக்கு: 021 2231 292**

noolahamfoundation@gmail.com

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### 60 பொலிஸார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரிகளுக்கு எதிராகப் பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள அவர் அரசியல் தலையீடுகள் இன்றி இந்த இடமாற்ற உத்தரவுகள் அமுல்படுத்தப்பட உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (உ)

### சிறுவர் இல்லத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தந்தையுடன் சென்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் தனக்கு நிகழ்ந்த சித்திரவதை தொடர்பில் முறைப்பாடு பதிவு செய்தமையினைத் தொடர்ந்தே குறித்த விடயம் வெளியில் தெரியவந்துள்ளது.
இதனையடுத்தே அதிகாரிகளால் மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
சிறுவர்கள் சித்திரவதைக்குள்ளான சம்பவம் இரண்டு வாரங்களுக்கு முன் இடம்பெற்றது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
குறித்த சிறுவர் இல்லத்தில் யுத்தத்தில் தாய், தந்தை, பெற்றோர்களை இழந்த சிறுவர்களும், சிறுமிகளும் மற்றும் வறுமைக்கோட்டுக் குட்பட்ட சிறுவர்களும் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 07.10.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.